இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை – 600006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
New No. 6, College Road, Chennai–600 006
Phone: 044- 28271951

# வானிலை தகவல்

**நாள்: 27.07.2021** **நேரம்: 1230 மணி**

**தென்மேற்கு பருவக்காற்று மற்றும் வெப்ப சலனம் காரணமாக தமிழ்நாட்டில்**
**27.07.2021:** சேலம், கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன மழையும், ஏனைய மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய (தேனி, திண்டுக்கல், தென்காசி) மாவட்டங்கள், உள் மாவட்டங்கள், வடக்கு கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும்.
**28.07.2021:** மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய (கோயமுத்தூர், நீலகிரி, தேனி, திண்டுக்கல், தென்காசி) மாவட்டங்கள், வட மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

**29.07.2021 முதல் 31.07.2021 வரை:** கோயமுத்தூர், நீலகிரி மாவட்டங்கள், கடலோர மாவட்டங்கள் அதனை ஒட்டிய உள் மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடனும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 36 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.

**கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்ச மழை அளவு (சென்டிமீட்டரில்):**
புவனகிரி (கடலூர்) 8, மங்களபுரம் (நாமக்கல்), ஆத்தூர் (சேலம்) தலா 5, பெரம்பூர் (சென்னை), பரங்கிப்பேட்டை (கடலூர்), ஸ்ரீமுஷ்ணம் (கடலூர்), லப்பைக்குடிக்காடு (பெரம்பலூர்) தலா 4, சிதம்பரம் (கடலூர்), அம்பத்தூர் (திருவள்ளூர்) தலா 3, தேவலா (நீலகிரி), திருத்தணி (திருவள்ளூர்), கொள்ளிடம் (மயிலாடுதுறை), சேலம், ஜெயம்கொண்டம் (அரியலூர்), நடுவட்டம் (நீலகிரி), திருவாலங்காடு (திருவள்ளூர்), குறிஞ்சிப்பாடி (கடலூர்), சோலையார் (கோவை), சின்னக்கல்லார் (கோவை) தலா 2, சென்னை நுங்கம்பாக்கம், வால்பாறை தாலுகா ஆபீஸ் (கோவை), விருதாச்சலம் (கடலூர்), கடலூர் தலா 1.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை :**

## வங்க கடல் பகுதிகள்:

**27.07.2021:** தமிழ்நாடு- ஆந்திர கடலோர பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும். **மீனவர்கள் இப்பகுதிகளுக்கு எச்சரிக்கையுடன் செல்ல அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**27.07.2021:** வட கிழக்கு வங்க கடல், மத்திய கிழக்கு வங்க கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.
**28.07.2021:** மத்திய வங்க கடல், வடக்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.
**29.07.2021:** மத்திய வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

**மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

## அரபிக்கடல் பகுதிகள்:

**29.07.2021 முதல் 31.07.2021வரை:** கர்நாடக கடலோர பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.
**27.07.2021 முதல் 31.07.2021வரை:** தென் மேற்கு, வடக்கு மற்றும் மத்திய அரபிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.
**மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.

முனைவர் நா. புவியரசன்
இயக்குனர்
சென்னை வானிலை ஆய்வு மையம்.

சென்னை வானிலை மையம்

**01.06.2021 முதல் 27.07.2021 வரை பெய்த மழை அளவு**

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 202 | 109.5 | 84 |
| செங்கல்பட்டு | 162.9 | 150.2 | 8 |
| சென்னை | 228.4 | 166.6 | 37 |
| கோயம்புத்தூர் | 579.8 | 372.3 | 56 |
| கடலூர் | 178.8 | 101.2 | 77 |
| தர்மபுரி | 194.9 | 117.5 | 66 |
| திண்டுக்கல் | 166.6 | 91.3 | 83 |
| ஈரோடு | 100 | 89 | 12 |
| கள்ளக்குறிச்சி | 191.9 | 113.8 | 69 |
| காஞ்சிபுரம் | 237.8 | 163.3 | 46 |
| கன்னியாகுமரி | 213.2 | 278.3 | -23 |
| காரைக்கால் | 76.3 | 101.7 | -25 |
| கரூர் | 95.9 | 49.4 | 94 |
| கிருஷ்ணகிரி | 170.1 | 105.5 | 61 |
| மதுரை | 184.4 | 102.5 | 80 |
| மயிலாடுதுறை | 115.3 | 82.3 | 40 |
| நாகப்பட்டினம் | 129.4 | 76.9 | 68 |
| நாமக்கல் | 181.1 | 96 | 89 |
| நீலகிரி | 695.4 | 443.2 | 57 |
| பெரம்பலூர் | 263.9 | 68.4 | 286 |
| புதுச்சேரி | 141.8 | 117.7 | 20 |
| புதுக்கோட்டை | 101.5 | 105 | -3 |
| ராமநாதபுரம் | 44.2 | 37.7 | 17 |
| ராணிப்பேட்டை | 261.3 | 158.7 | 65 |
| சேலம் | 253.8 | 136.7 | 86 |
| சிவகங்கை | 119.4 | 108.9 | 10 |
| தென்காசி | 87.6 | 91.5 | -4 |
| தஞ்சாவூர் | 107.7 | 89 | 21 |
| தேனி | 208.4 | 76.9 | 171 |
| திருநெல்வேலி | 67.8 | 40 | 70 |
| திருப்பத்தூர் | 236.5 | 133.6 | 77 |
| திருப்பூர் | 65.6 | 43.3 | 51 |
| திருவள்ளூர் | 299 | 166.9 | 79 |
| திருவண்ணாமலை | 249.2 | 139 | 79 |
| திருவாரூர் | 100.5 | 87.2 | 15 |
| தூத்துக்குடி | 44.1 | 16.1 | 174 |
| திருச்சிராப்பள்ளி | 168.7 | 72.5 | 133 |
| வேலூர் | 280 | 165.4 | 69 |
| விழுப்புரம் | 249.3 | 114.9 | 117 |
| விருதுநகர் | 82.3 | 52.3 | 57 |